සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

31.08.2018 / 0830 - 1030

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில்** புள்ளடி **(X)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தொடர்பாடுபவர் மற்றும் பெறுநர் ஆகியோரின் வகிபங்குகள் பரிமாற்றப்படுதலை தொடர்பாடல் மாதிரியொன்றின் மூலம் தெளிவாக முன்வைத்தவர்
(1) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் (2) ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட்
(3) ஷெனொன் மற்றும் வீவர் (4) டேவிட் கே. பெர்லோ
(5) எட்வேர்ட் சப்பியர்

**2.** தாராண்மைவாதக் கருத்தியலுக்கு எதிராகப் பணியாற்றியவர் எனக் கருதப்படுபவர்
(1) ஸ்டுவர்ட் மில் (2) ஜோன் லொக்
(3) தோமஸ் ஜெபர்சன் (4) ஜோசப் கோயபல்ஸ்
(5) ஜோன் எர்ஸ்கைன்

**3.** தொடர்பாடுபவரின் எண்ணங்கள் செய்தியாக மாற்றப்படும் செயன்முறை,
(1) பேச்சு எனப்படும். (2) புலக்காட்சி எனப்படும்.
(3) கற்பனையாக்கம் எனப்படும். (4) ஊடுகடத்துதல் எனப்படும்.
(5) குறிமுறையாக்கம் எனப்படும்.

**4.** தொடர்பாடலின்போது தொடர்பாடுபவர் எதிர்பார்த்த பேற்றை அடைந்துகொள்ளல் முக்கியமானதாகும். இது விதந்துரைக்கப்படுவது
(1) ஷ்ராம் - ஒஸ்கூட் மாதிரியிலாகும்.
(2) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்திலாகும்.
(3) டேவிட் கே. பெர்லோவின் மாதிரியிலாகும்.
(4) வில்பர் ஷ்ராமின் வரைவிலக்கணத்திலாகும்.
(5) ஷெனொன் மற்றும் வீவரின் மாதிரியிலாகும்.

**5.** கருவியின் உதவியுடனான ஆட்களிடைத் தொடர்பாடல் முறையாக அமைவது
(1) தொலைபேசி (2) ஒலிபெருக்கி (3) வானொலி
(4) பிரஜைகள் ஊடகம் (5) ஒலிவாங்கி

**6.** தொடர்பாடல் பற்றிய கணிதரீதியான மாதிரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட மிக முக்கிய அம்சம்
(1) மூலம் (2) தாக்கம் (3) இடையூறு
(4) பின்னூட்டல் (5) பெறுநர்

**7.** டேவிட் கே. பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில், 'மூலம்' என அறியப்படுவது
(1) சம்பவம் (2) சந்தர்ப்பம் (3) தொடர்பாடுபவர்
(4) அறிவிப்பாளர் (5) எண்ணக்கரு

[பக். 2 ஐப் பார்க்க

**8.** வெகுசனத் தொடர்பாடலானது ஏனைய தொடர்பாடல் வகைகளிலிருந்து வேறுபடுவதற்கான காரணம், அதன் புலப்படக்கூடியதான
(1) தொழில்சார் தன்மையினாலாகும்.
(2) ஒரே பண்பினரான பெறுநர்களினாலாகும்.
(3) தொடர்பாடுபவருக்கும் பெறுநருக்கும் இடையிலான நெருக்கத்தினாலாகும்.
(4) செயற்படுதிறன்மிக்க பின்னூட்டத்தினாலாகும்.
(5) தொடர்ச்சித்தன்மையற்றிருப்பதனாலாகும்.

**9.** சுய எண்ணக்கரு, சுய மதிப்பு, சுய பிரதிமை (self image) ஆகியன மிக நெருக்கமாயிருப்பது,
(1) ஆட்களிடைத் தொடர்பாடலுடனாகும்.
(2) ஆளுள் தொடர்பாடலுடனாகும்.
(3) வாய்மொழியல்லாத தொடர்பாடலுடனாகும்.
(4) தூண்டல் - தூண்டற்பேறு கோட்பாட்டுடனாகும்.
(5) இரு படிநிலை எண்ணக்கருவுடனாகும்.

**10.** "தேசிய அபிவிருத்தி என்பது பிரதானமாக பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, பண்பாட்டு அபிவிருத்தி மற்றும் நன்நெறி அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும் முழுமையான அபிவிருத்தியாகும்." இச்சிந்தனையை முன்வைத்தவர்
(1) வில்பர் ஷ்ராம் (2) டட்லி சியர்ஸ் (3) விமல் திசாநாயக்க
(4) எவரெட் எம். ரொஜர்ஸ் (5) மகாத்மா காந்தி

**11.** அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் உருவாக்கம் விதந்துரைக்கப்பட்டது,
(1) வைத்தியநாதன் ஆணைக்குழுவினாலாகும்.
(2) சோல்பரி ஆணைக்குழுவினாலாகும்.
(3) வீரசூரிய ஆணைக்குழுவினாலாகும்.
(4) தகவல் ஆணைக்குழுவினாலாகும்.
(5) ஹுலுகல்ல ஆணைக்குழுவினாலாகும்.

**12.** மானுட அறிவின் தோற்றம் பற்றிய தேடலில் பயன்படுத்தப்படும் நுட்பமுறை
(1) ஆழ்பரிவு (2) தொகுப்பு (3) சமூகமயமாதல்
(4) மையப்படுத்துதல் (5) ஒரே பண்பினராகுதல் (Homogenization)

**13.** இரு படிநிலைத் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில், பொதுமக்களுக்கான தகவலைத் தெரிவிப்பதில் முக்கிய வகிபங்கினையாற்றுபவர்கள்
(1) ஊடகவியலாளர்கள் (2) வாயிற் காப்பாளர்கள்
(3) அமுக்கக் குழுக்கள் (4) கருத்துருவாக்கத் தலைவர்கள்
(5) ஊடக உரிமையாளர்கள்

**14.** ஒரு சம்பவம் தொடர்பில் புறவயமானதும் பகுப்பாய்வின்படியானதுமான விடயதானத்தை வெகுசன ஊடகம் வழியாக வழங்கும்போது மிக முக்கிய அம்சமாக அமைவது
(1) அறிக்கையிடல் (2) வாயிற்காப்பு (3) உரிமையாண்மை
(4) விமர்சனம் (5) செம்மையாக்கம்

**15.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தேர்தல் பரப்புரைகளில், பொதுமக்களின் நிகழ்ச்சிநிரல் வெகுசன ஊடகங்களால் தயாரிக்கப்படுகிறது.
(2) ஆழ்பரிவு பற்றி நன்றாகப் புரிந்துகொள்வதாயின், அனுதாபத்துடன் அது ஒப்பிடப்பட வேண்டும்.
(3) வாய்மொழித் தொடர்பாடல், வாய்மொழியல்லாத தொடர்பாடல் அம்சங்களையும் கொண்டிருக்கிறது.
(4) வெகுசன ஊடகங்கள் ஊடாக சமூக யதார்த்தம் சரியாக விவரித்துக் காட்டப்படுகின்றது.
(5) மொழியில், ஒலிக்கும் அர்த்தத்திற்கும் இடையே தர்க்கரீதியான தொடர்பு இருப்பதில்லை.

**16.** வெகுசன ஊடகங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு உள்வாங்கப்படுவதில் ஆகக்குறைந்த இடத்தைக் கொண்டிருப்பது
(1) ஒழுக்கநெறிக் கோவைகளின் உருவாக்கம்
(2) பதிவை மேற்கொள்வதற்கான செயன்முறை
(3) தன்னாட்சி அதிகாரியை நியமித்தல்
(4) சட்டங்களையும் நெறிமுறைகளையும் உருவாக்குதல்
(5) சுய தணிக்கை

[பக். 3 ஐப் பார்க்க

**17.** நவீன வெகுசன ஊடகங்களில் ஆகக் குறைந்தளவில் புலப்படக்கூடியதாக அமைவது
(1) நாட்டார் மொழியின் பயன்பாடு
(2) அமைப்பொழுங்கு காணப்படுகின்றமை
(3) அதிகம் கிளர்வூட்டலைத் தரக்கூடியதாயிருத்தல்
(4) தூண்டற் தன்மையின் பயன்பாடு
(5) தனியாள் வேறுபாடுகளை இனங்காணக்கூடியதாயிருத்தல்

More Past Papers at
tamilguru.lk

**18.** படைப்பாக்கத் தொடர்பாடலுக்கு உரித்தான செயற்பாடு **அல்லாதது**
(1) தரவுப் பகுப்பாய்வு
(2) மகிழ்ச்சியைத் தருதல்
(3) சமூகமயமாக்கத்தை உருவாக்குதல்
(4) அறிவுசார் ஞானத்தை உருவாக்குதல்
(5) கருத்தியல்களைப் பரிமாற்றிக்கொள்ளுதல்

**19.** ஆட்களிடைத் தொடர்பாடலுக்கு உரித்து **அல்லாத** பண்பாகக் கொள்ளத்தக்கது
(1) வாய்மொழி மற்றும் வாய்மொழி சாராத அம்சங்களைக் கொண்டிருத்தல்
(2) தன்னெழுச்சியாக உருவாகும் அம்சங்களைக் கொண்டிருத்தல்
(3) வளர்ச்சிக்கான அம்சம் புறமொதுக்கப்பட்டிருத்தல்
(4) கிளர்வூட்டல் செயன்முறையைக் கொண்டிருத்தல்
(5) ஆழ்பரிவுடன் தொடர்புடையதாயிருத்தல்

**20.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) புகைப்படங்களும் வரைவியல் அலங்காரங்களும் (graphic designs) காட்சிப்புலக் கலைக்குரியவை.
(2) வரைவியல் அலங்காரங்களை நயப்பதற்கு விசேட ஆற்றல் தேவைப்படுகின்றது.
(3) ஓவியத்துக்கும் வரைவியலுக்கும் ஒரே படைப்பாக்கக் கோட்பாடு பிரயோகிக்கப்படுகிறது.
(4) புகைப்பட மற்றும் வரைவியல் படைப்புகளுக்குப் பயிற்சியின்பேறான திறன்கள் தேவைப்படுகின்றன.
(5) ஓவியம், புகைப்படம் மற்றும் வரைவியல் அலங்காரங்களுடன் இலத்திரனியல் தொழில்நுட்பம் தொடர்புபட்டுள்ளது.

**21.** இந்திய, பங்களாதேச திரைப்படங்களைப் பார்வையிட்ட திறனாய்வாளரொருவர் 'ஒப்பீடு', 'பகுப்பாய்வு' ஆகிய ஊடக விமர்சன அணுகுமுறைகளினூடாக அவற்றைத் திறனாய்வு செய்திருந்தார். அவ்வாறான அணுகுமுறைகளுடன் பொருந்தும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) திரைப்படங்களின் எண்ணக்கரு, கலைநுட்பங்கள், உள்ளடக்கம் ஆகியன தொடர்பாக மதிப்பிடல்
(2) படைப்புக்களின் நன்னெறிசார் பயன்பாட்டினைக் காட்டுதல்
(3) திரைப்பட உருவாக்கத்தின் பின்னணி, காலப்பகுதி, தனிப்பட்ட பாத்திரங்களை விபரித்தல்
(4) சமூகம் மற்றும் சமூக உறவுகளை விபரித்தல்
(5) திரைப்படங்களின்பால் பார்வையாளர்கள் கவரப்படும் விதமாக விமர்சனம் செய்தல்

**22.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஸ்மார்ட் செல்லிடத் தொலைபேசியைக் (smart phone) கருவி உதவியுடனான குழுத் தொடர்பாடலுக்குரிய ஒரு கருவியாகக் கருதலாம்.

B - பிரஜைகள் ஊடக அறிக்கையிடல் செயன்முறையில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் கருவியாக செல்லிடத் தொலைபேசியைக் கருத முடியும்.

C - தொலைபேசியும் கணினியும் வெகுசன ஊடகத் தொழில்நுட்பத்துடன் இணைந்தமையானது, ஊடகக் குவிவின் பெரும் வளர்ச்சிப் புள்ளியாகும்.

மேற்குறித்த கூற்றுகள் தொடர்பான சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) A மாத்திரம் உண்மையானது.
(2) A யும் B யும் மாத்திரம் உண்மையானவை.
(3) B யும் C யும் மாத்திரம் உண்மையானவை.
(4) A, B, C அனைத்தும் உண்மையானவை.
(5) A, B, C அனைத்தும் உண்மைக்கு மாறானவை.

[பக். 4 ஐப் பார்க்க

**23.** நாட்டாரியற் கற்கையானது சகல படைப்பாளிகளுக்கும் முக்கியமானது எனத் திறனாய்வாளர்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றனர். ஏனெனில்,
(1) நாட்டாரியலின் வழியே மக்களின் மெய்யறிவை இனங்காண முடியும்.
(2) நாட்டாரியல் ஓர் அடிப்படை மூலாதாரமாகும்.
(3) நாட்டாரியல் படைப்பாக்கத் தன்மையானது.
(4) நாட்டாரியலில் கதைக் கருக்களை கண்டறிய முடியும்.
(5) நாட்டாரியல் நாட்டார் மொழியை கொண்டிருக்கிறது.

**24.** மனிதனால் பயிர்கள் அறுவடை செய்யப்படுவதற்கு மாற்றாக, நெல் அறுவடை இயந்திரம் துரிதமாகப் புழக்கத்திற்கு வந்தமையினாற், உள்ளூர் விவசாயப் பண்பாட்டில் நிகழ்ந்தது,
(1) துணைப் பண்பாட்டாக்கம் (para - culturization) ஆகும்.
(2) பண்பாட்டு ஆர்முடுகல் (cultural acceleration) ஆகும்.
(3) பண்பாட்டு அதிர்வு (cultural shock) ஆகும்.
(4) பண்பாட்டுப் பரவல் (cultural diffusion) ஆகும்.
(5) பண்பாட்டுத் தேக்கம் (cultural lag) ஆகும்.

More Past Papers at
tamilguru.lk

**25.** குறித்தவொரு நாட்டில், சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தும் முகமாக சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுவது, அந்த ஊடகங்களில் செய்தியானது
(1) பெறுநர்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவுவதன் காரணத்தினாலாகும்.
(2) உயரிய நம்பிக்கையைப் பெற்றிருப்பதனாலாகும்.
(3) பகுப்பாய்வுடனான தகவல்கள் முன்வைக்கப்படுவதன் காரணத்தினாலாகும்.
(4) படங்கள் மற்றும் ஒலி ஆகிய சேர்க்கைகள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதன் காரணத்தினாலாகும்.
(5) தகவல்கள் அதிகாரம்மிக்க மூலங்களின் அடிப்படையில் மாத்திரம் முன்வைக்கப்படுவதன் காரணமாகும்.

**26.** அச்சு ஊடகம் தொடர்பான வகுப்பறைக் கலந்துரையாடல் ஒன்றில் வெளிப்படுத்தப்பட்ட சில கருத்துகள் வருமாறு:

நிமல் : அச்சு ஊடகத்தின் பிரதான கருவி மொழியாகும்.
கமல் : படங்கள், வர்ணங்கள், ஓவியங்கள் என்பனவும் அதனுடன் இணைக்கப்பட முடியும்.
அமல் : அச்சு ஊடகமானது நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்திப் பத்திரிகைகள் என வேறுபட்ட வடிவங்களைக் கொண்டுள்ளது.
ரமல் : ஒப்பீட்டு ரீதியாக அச்சு ஊடகமானது வலுவான, செயற்பாடுமிக்க ஊடகமாகும்.
விமல் : அச்சு ஊடகம் பெரும்பாலும் பொது மொழியைப் பயன்படுத்துகின்றது.

அச்சு ஊடகம் தொடர்பான சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்
(1) நிமல், கமல், அமல், ரமல் ஆகியோராவர்.
(2) கமல், அமல், ரமல், விமல் ஆகியோராவர்.
(3) நிமல், கமல், அமல், விமல் ஆகியோராவர்.
(4) நிமல், கமல், ரமல், விமல் ஆகியோராவர்.
(5) நிமல், கமல், அமல், ரமல், விமல் ஆகிய அனைவருமாவர்.

**27.** புதிய தாராண்மைவாதக் கருத்தியலின்படி, பூகோளமயமாக்கத்தின் பரவுகையை **ஊக்குவிக்காத** காரணியாக அமைவது
(1) துணை தேசியக் கம்பனியாக்கம்
(2) சந்தை விரிவாக்கம்
(3) தடையல்லா வர்த்தகம்
(4) தேசிய அரசுகள் வலுப்படுத்தப்படல்
(5) அரசிடமிருந்து பொருளாதாரத்தை விடுவித்தல்

**28.** 'பெறுநரை மையப்படுத்திய செய்தி' என்பதால் கருதப்படுவது யாதெனில்,
(1) பெறுநருக்குச் செய்திகளை முன்வைப்பதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்
(2) பெறுநருக்கு ஏற்றவகையிலான செய்திகளை உருவாக்குதல்
(3) பெறுநருக்குச் செய்திகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அவை பற்றி விசாரித்தறிதல்
(4) செய்தி வழங்குதலில் தொடர்பாடுபவரின் அடையாளத்தைக் கவனத்திற் கொள்ளாமை
(5) பெறுநரின் சமூக, பண்பாட்டுப் பின்னணிகள் பற்றி கவனஞ் செலுத்தாமல் செய்திகளைத் தயாரித்தல்

[பக். 5 ஐப் பார்க்க

**29.** ஜனதா வங்கியில் நிதியை முதலீடு செய்திருந்த வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தரவுகளை ஒரு செய்தி இணையத்தளம் வெளியிட்டிருந்தது. இது, வங்கியின் நற்பெயரைக் களங்கப்படுத்துவதாக அமைந்திருந்ததால், சம்பவத்தை விளக்குவதற்காக ஊடகச் சந்திப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வங்கி அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டியது,
(1) பங்கேற்கும் ஊடகவியலாளருக்குச் சிறப்பான உபசரிப்பைத் தயார் செய்தலிலாகும்.
(2) ஊடகவியலாளருக்குப் பெறுமதிவாய்ந்த அன்பளிப்பொன்றை நினைவுப் பரிசாக வழங்குவதிலாகும்.
(3) ஊடகவியலாளருக்கு வங்கியின் முன்னைய ஆண்டறிக்கைப் பிரதிகளை வழங்குவதிலாகும்.
(4) வங்கியினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் பற்றி விவரித்தலிலாகும்.
(5) கேட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் கேள்விகளுக்கான பதில்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதிலாகும்.

**30.** மாற்று ஊடகம் தொடர்பிலான மிகப் பொருத்தமான கூற்று, மாற்று ஊடகமானது
(1) பிரசித்த பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும்.
(2) பிரதான துறைகளில் ஊடகங்களுடன் போட்டியிடுகின்றது.
(3) சமூகத்தின் பெருந்தொகுதியொன்றைச் சென்றடைவதாக உள்ளது.
(4) கருத்தியல் சார் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.
(5) உயர் ஊடகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

**31.** தற்போதைய பிரசித்த பண்பாட்டின் ஓர் அம்சமாக தொலைக்காட்சி ஊடகம் அதிகம் வெளிப்படுத்தி நிற்பது,
(1) பண்பாட்டு விடயங்கள் பற்றிய கவனயீர்ப்பினையாகும்.
(2) எளிமைத்தன்மையின் பெறுமதியையாகும்.
(3) நுகர்வுத்தன்மையின் கவர்ச்சியையாகும்.
(4) பொருள்முதன்மைவாதமாயிருப்பதன் அர்த்தமிழப்பினையாகும்.
(5) விழுமியங்களின் பெருந்தன்மையினையாகும்.

**32.** பொதுமக்கள் தொடர்புடன் **பொருத்தமற்றதான** சந்தர்ப்பத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கம்பனி ஒன்று பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் பற்றிய அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல்
(2) நிறுவனம் ஒன்று தனது ஆண்டறிக்கைகளை வெளியிடுதல்
(3) பாடசாலை ஒன்று மாதாந்தச் செய்திமடல் ஒன்றை வெளியிடுதல்
(4) பல்கலைக்கழகம் ஒன்று தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவுக் கண்காட்சியை ஒழுங்கமைத்தல்
(5) அரசியல்வாதியொருவரால் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படல்

**33.** வகுப்பறையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது சில மாணவர்கள் முன்வைத்த கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

நிமல் : விளம்பரங்கள் எனப்படுவது வர்த்தக இலக்குடன் மேற்கொள்ளப்படும் ஒரு பரப்புரையாகும்.
விமல் : பொதுமக்கள் சேவையை நோக்காகக் கொண்ட விளம்பரங்களையும் காணமுடிகின்றது.
கமல் : அரசியல் விளம்பரங்கள் மக்களிடத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.
அமல் : ஒப்பீட்டுரீதியில் விளம்பரப்படுத்தலின் மூலம் சமூகம் நன்மையடைகின்றது.


மேற்குறித்தவற்றில் ஊடக விளம்பரப்படுத்தலுடன் தொடர்புடைய கூற்றுகளை முன்வைத்தவர்கள்,
(1) நிமலும் விமலும் ஆவர். (2) நிமலும் கமலும் ஆவர்.
(3) நிமல், விமல், கமல் ஆகியோராவர். (4) விமல், கமல், அமல் ஆகியோராவர்.
(5) நிமல், விமல், கமல், அமல் ஆகிய அனைவருமாவர்.

**34.** மொழியும் வாசகர்களும் அச்சு ஊடகங்களின் தீர்மானகரமான அம்சங்களாகக் காணப்படுகின்றன. அதற்கமைய மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) செய்திப் பத்திரிகை அறிக்கையிடலில், ஊடகவியலாளரின் மொழி அடையாளம் வெளிப்படையாகத் தெரியமாட்டாது.
(2) கவிதை நூலொன்றை நயத்தலின்போதும் செய்திப் பத்திரிகை ஒன்றின் கவிதைப் பக்கமொன்றை நயத்தலின்போதும் வாசகர் ஒரே நிலையிலான கவனக்குவிப்பை மேற்கொள்வர்.
(3) புகைப்படங்கள், ஓவியங்கள் மற்றும் கேலிச்சித்திரங்கள் என்பன அச்சு ஊடக மொழிக்கு உரியனவல்ல.
(4) நாவலும் செய்திப் பத்திரிகை ஒன்றின் பகுதிகளாகப் பிரசுரமாகும் ஒரு கதையும் ஒரே பண்பினைக் கொண்டிருக்கும்.
(5) நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் பொது மொழியொன்றின் பயன்பாடு பொருத்தமானது.

[பக். 6 ஐப் பார்க்க

● **35** தொடக்கம் **38 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்துக.**

* கீழ்வருவது ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியெனக் கருதுக.




**35.** லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியில் இடம்பெறுவனவற்றிலிருந்து ஒரு விடயம் நீக்கப்படுமாக இருந்தால், அது பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியிலுள்ளவற்றை ஒத்ததாக அமையும். அவ்வாறு ஒத்திருப்பதற்கு மேற்குறித்த மாதிரியிலுள்ள விடயங்களில் நீக்கப்பட வேண்டியது
(1) A (2) B (3) C (4) D (5) E

**36.** பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடங்கியுள்ள ஒவ்வொரு மூலாதாரத்துடனும் இணைந்ததாக ஐந்து பிரதான பண்புகள் வீதம் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலே வினா 35 இன் விடையாகக் குறிப்பிடப்பட்ட விடயம் நீக்கப்பட்டதன் பின்னர், மிகுதியாகவுள்ள நான்கு விடயங்களும் பெர்லோவின் மாதிரியுடன் ஒத்திருக்குமாயின், அந்த நான்கில் ஒரே விதமான பண்புகளைக் காணத்தக்க விடயங்கள் இரண்டுமாவன
(1) A, B ஆகியன (2) A, D ஆகியன (3) B, C ஆகியன
(4) B, D ஆகியன (5) C, E ஆகியன

**37.** மேற்படி மாதிரியில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின், செய்தியானது பயணிப்பது
(1) B இலிருந்து A இற்காகும். (2) A இலிருந்து D இற்காகும்.
(3) D இலிருந்து A இற்காகும். (4) E இலிருந்து A இற்காகும்.
(5) A இலிருந்து E இற்காகும்.

**38.** மேற்படி மாதிரி வெகுசனத் தொடர்பாடல் சந்தர்ப்பமொன்றில் பிரயோகிக்கப்படுமானால், செய்திப் பத்திரிகைக்குரிய விடயமாக அமைவது
(1) A (2) B (3) C (4) D (5) E

**39.** பின்வரும் கூற்றுகளைக் கவனமாக வாசிக்க.
A - ஒருவரின் மனநிலையை மேலெழுந்தவாரியாக அல்லாது ஆழமாக ஆராய்தல்
B - அடுத்த தரப்பினருடன் தன்னை அடையாளப்படுத்துவதன் ஊடாக, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவராயிருத்தல்
C - வெற்றிகரமான சமூக வாழ்வுக்காக அடுத்தவரின் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் புரிந்துகொள்ளல்
மேலுள்ள நிலைகள் பெரும்பாலும் தொடர்புடையதாக இருப்பது
(1) புலக்காட்சியுடனாகும். (2) ஆளுள் தொடர்பாடலுடனாகும்.
(3) சமூக சகவாழ்வுடனாகும். (4) ஆழ்பரிவுடனாகும்.
(5) துருவநிலையுடன் (Polarization) ஆகும்.

**40.** சுதந்திர சந்தைமுறை மற்றும் ஊடகப் பண்பாடு தொடர்பிலான **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சில சமயங்களில் சந்தை அமைப்பில் பாரம்பரியப் பண்பாடும் கருத்திற் கொள்ளப்படுகின்றது.
(2) ஊடகப் பண்பாட்டை உருவாக்குவதற்காக நிபுணர்களின் ஆய்வுகள் எப்போதும் பயன்படுத்தப்படுகின்றன.
(3) வரையறுக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களைத் தவிர, ஊடகப் பண்பாடானது வணிக அதிகாரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமலிருக்கிறது.
(4) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊடகப் பண்பாடானது அதன் வர்த்தக நலன்களை மறைத்து வைத்திருக்கிறது.
(5) சந்தை அமைப்பிற்குத் தேவையான சூழலை ஊடகப் பண்பாடு உருவாக்குகிறது.

**41.** பின்வருவன சுய எண்ணக்கரு தொடர்பான கலந்துரையாடலொன்றில் மாணவர்கள் முன்வைத்த சில கூற்றுகள் ஆகும்.

ருவான் : சுய எண்ணக்கரு என்பது ஒருவர் மற்றையவர்களுக்கு எவ்வாறு தன்னை எடுத்துக்காட்டுகிறார் என்பதாகும்.
ராம் : இது அளவீட்டுக்கு உட்படுத்தப்பட முடியாதது.
ரஹீம் : இது பிறப்பிலிருந்து வருவது.
ரொஜர் : இது கால ஓட்டத்துடன் மாற்றமுறலாம்.

இவற்றுள் சுய எண்ணக்கரு பற்றிய சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்,
(1) ரஹீம் மற்றும் ராம், ருவான் மற்றும் ரொஜர் அல்லர்.
(2) ருவான் மற்றும் ரஹீம், ராம் மற்றும் ரொஜர் அல்லர்.
(3) ருவான் மற்றும் ரொஜர், ராம் மற்றும் ரஹீம் அல்லர்.
(4) ராம் மற்றும் ரொஜர், ருவான் மற்றும் ரஹீம் அல்லர்.
(5) ருவான், ராம், ரஹீம் மற்றும் ரொஜர் ஆகிய அனைவருமாவர்.

More Past Papers at
tamilguru.lk

**42.** பூகோளமயமாக்கல் கருத்தமைவில் வெகுசன ஊடகத்தின் பண்பாக **அமையாதது**
(1) பன்மைத்துவமிக்க பெறுநர்களுக்கு ஒரே செய்தி எடுத்துச் செல்லப்படுதல்
(2) ஒப்பீட்டுரீதியாக செயலூக்கமற்ற நுகர்வோர் குழுவொன்றைக் காண முடிதல்
(3) பொதுவான அடையாளங்களுக்கன்றி தனிப்பட்ட அடையாளங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல்
(4) மக்களை, நடைமுறையிலுள்ள சமூகப் போக்கு இயற்கையானதென ஏற்றுக்கொள்ளச் செய்தல்
(5) சமூகத்தில், அதிகாரமற்றோரை மௌனித்திருக்க வைத்திருக்கும் போக்குக் காணப்படுதல்

**43.** முரண்பாடுகள் ஒரு வரம் என முரண்பாட்டுத் தீர்வுக்கான நிபுணர்கள் விவரிப்பது, ஏனெனில்
(1) முரண்பாடுகள் சமூகமொன்றை வாழ வைக்கின்றன.
(2) முரண்பாடுகள் சமூகத்துக்கான செய்திகளை உருவாக்குகின்றன.
(3) முரண்பாடுகள் சமூக நிலைமாற்றத்துக்கு அவசியமானவை.
(4) முரண்பாடுகள் காரணமாக சில தரப்பினர் நன்மையடையலாம்.
(5) முரண்பாடுகளின் தோற்றமானது சமூகமொன்றின் நிர்வாகத்தை இலகுவாக்கும்.

**44.** புதிய திரைப்படமொன்று திரையிடப்பட்டு சில நாட்களுக்குப் பின்னர், அது பற்றிய கலந்துரையாடல்கள் ஓய்வறைகளிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் நடைபெற்றமை அந்தத் திரைப்படம் தொடர்பான பிரபல்யம் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தியது. இதன்படி பிரபல்யம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது
(1) ஆளிடைத் தொடர்பாடல்
(2) வாய்மொழித் தொடர்பாடல்
(3) பிரசித்தமான அல்லது புகழ்பெற்ற பண்பாடு
(4) முறைசாராத் தொடர்பாடல்
(5) வெகுசனத் தொடர்பாடல்

**45.** ஊடக பௌதிகப் பண்பாட்டினதும் தொழில்நுட்பத்தினதும் துரித வளர்ச்சிக்குச் சமாந்தரமாக, ஊடக விளங்கறிவும் ஊடகத் திறன்களும் வளரப்பெறவில்லை என்பது தற்போதைய ஊடகப் பண்பாடு எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினையாகும். பண்பாட்டுக் கற்கைகளில் இது அறியப்படுவது
(1) பண்பாட்டுச் சிதைவு என்றாகும். (2) பண்பாட்டுப் பரவல் என்றாகும்.
(3) பண்பாட்டு விருத்தி என்றாகும். (4) பண்பாட்டுத் தேக்கம் என்றாகும்.
(5) பண்பாட்டுப் பன்மைத்துவம் என்றாகும்.

**46.** ஊடகப் பண்பாட்டுச் சிதைவு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் எதுவித நடவடிக்கையும் எடுக்காமையினால், இந்த நிலையைத் தடுப்பதற்காக புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர இருப்பதாக அரசின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இங்கு நிகழ்த்தப்பெறுவது
(1) சமூக ஜனநாயகப்படுத்தல் தொடர்பாடல் எண்ணக்கருவாகும்.
(2) சமூகப் பொறுப்புடைமை தொடர்பாடல் எண்ணக்கருவாகும்.
(3) தொடர்பாடலின் தாராண்மைவாத எண்ணக்கருவாகும்.
(4) தொடர்பாடல் பற்றிய சோவியத் கம்யூனிச தொடர்பாடல் எண்ணக்கருவாகும்.
(5) தொடர்பாடல் பற்றிய அதிகாரவாத எண்ணக்கருவாகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**47.** உலகத்திலுள்ள வேறுபட்ட நாடுகளில் காணப்படும் அரசுக்கும் ஊடகங்களுக்கும் இடையிலான உறவுநிலை தொடர்பிலான வகுப்பறைக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் கீழே தரப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலும் காணக்கிடைக்கும் நிலை யாது ?

(1) ஊடக உரிமையாண்மையையும் கட்டுப்பாட்டையும் அரசு தனது கைகளில் வைத்திருக்கும் மேலாதிக்கமாகும்.
(2) ஊடகத்தை தனியார் உரிமை கொண்டிருந்தாலும், அது அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்றது.
(3) ஊடகத்தை தனியார் உரிமை கொண்டிருந்தாலும், அது அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.
(4) ஊடக உரிமையாண்மையும் கட்டுப்பாடும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.
(5) ஊடக உரிமையாண்மையும் கட்டுப்பாடும் அரசினதும் தனியாரினதும் பங்கேற்புடன் இடம்பெறுகின்றன.

**48.** ஊடகப் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மை தொடர்பிலான சில கூற்றுகள் கீழே தரப்படுகின்றன.

A - இது ஒருவழிப் பாதையாகும்.
B - கீழைத்தேயக் கருத்தியல்களைக் கண்டிக்கிறது.
C - இது மேலைத்தேயக் கருத்தியல்களை மதிக்கின்றது.
D - இது முக்கிய அம்சங்களைப் பரிமாற்றிக் கொள்கிறது.

இவற்றுள் மிகப் பொருத்தமான கூற்றுகள்

(1) A, B ஆகியன (2) B, C ஆகியன (3) C, D ஆகியன
(4) A, B, C ஆகியன (5) B, C, D ஆகியன

**49.** ஒரு பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளுக்கான புதிய கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஒன்றை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்தது. அதன் செயலடைவை செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் ஆவணமொன்றினூடாகக் கண்காணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.
செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பு ஆவணத்தில் அவசியம் உள்ளடக்கப்பட வேண்டிய சில முக்கிய விடயங்களாவன,

(1) இலக்குகள், வரவு-செலவுத் திட்டம், நிறுவனக் கட்டமைப்பு, வரையறைகள் முதலியன.
(2) வரவு-செலவுத் திட்டம், உத்திகள், பணி வரையறுக்கப்பட்ட பகுதிகள், எதிர்பார்க்கும் பெறுபேறுகள் முதலியன.
(3) நிதி வளங்கள், பௌதிக வளங்கள், மனித வளங்கள், மதிப்பீட்டுச் செயன்முறைகள் முதலியன.
(4) தொடர்புடைய செயற்பாடுகள், காலச் சட்டகம், நியதிகள், பொறுப்புகள் முதலியன.
(5) இலக்குகள், உத்திகள், வளங்கள், காலச் சட்டகம் முதலியன.

**50.** கீழ்வருவன ஊடக விளங்கறிவு தொடர்பிலான சில கூற்றுகளாகும்.

A - ஊடக விளங்கறிவின் அடிப்படையானது, வாசிக்கவும் எழுதவும் முடியுமான தகைமையாகும்.
B - ஊடக விளங்கறிவு அச்சு ஊடகத்துடன் அதிகம் தொடர்புடையது.
C - ஊடக விளங்கறிவு என்பது ஊடக உள்ளடக்கத்தைப் புரிந்துணர்வுடன் பயன்படுத்துவதாகும்.
D - செய்திகளை உருவாக்குவதும் திறனாய்வதும் ஊடக விளங்கறிவின் ஒரு பகுதியாகும்.

மேற்படி கூற்றுகளில்

(1) A மாத்திரம் உண்மையாகும்.
(2) B மாத்திரம் உண்மையாகும்.
(3) C மாத்திரம் உண்மையாகும்.
(4) A, B ஆகியன உண்மையானவை; ஆனால் C, D ஆகியன உண்மைக்கு மாறானவை.
(5) A, B ஆகியன உண்மைக்கு மாறானவை; ஆனால் C, D ஆகியன உண்மையானவை.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

01.09.2018 / 0830 - 1140

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** தொடர்பாடல் செயன்முறை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றாகும்.

(i) சமூகத்தில் பயன்படுத்தப்படும் **முறைசாராத்** தொடர்பாடல் சங்கிலிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) ஆட்களிடைத் தொடர்பாடலில் பயன்படுத்தக்கூடிய புதிய ஊடக முறைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) வெகுசனத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினைப்** பற்றிக் குறிப்புகள் எழுதுக.

(iv) வாய்மொழியல்லாத தொடர்பாடலின் பண்புகள் **நான்கினை** விவரிக்குக.

**2.** படைப்பாக்கச் சிந்தனை மூலம், உலகினைத் தனித்தன்மையுடன் நோக்கி மனிதனால் புதிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

(i) வெகுசன ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்யும்போது கவனத்திற் கொள்ளப்படும் 'படைப்பாக்கபூர்வமான வாசிப்புடன்' தொடர்புடைய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) மக்களின் வாழ்வில் நாட்டார் பாடல்கள் முக்கியத்துவம் பெறும் முறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றைப்** பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) படைப்பாக்க அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றின் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விவரிக்குக.

(iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் வெகுசன ஊடகங்களை எவ்வாறு ஒரு கற்றற் கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது பற்றி **200** சொற்களுக்குக் குறையாத கட்டுரையொன்று எழுதுக.

(a) மொழியைக் கற்றல் (**100** சொற்கள்)

(b) சமூகமயமாதல் (**100** சொற்கள்)

**3.** (i) ஊடகப் பண்பாட்டின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் செய்தியில் ஏற்படக்கூடிய பாதிப்பினை, அதில் இடம்பெறும் முக்கிய தடைகளின் **இரண்டு** வகைகளை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விளக்குக.

(iii) செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியர் தலையங்கம் ஏன் முக்கியமானது என்பதற்கு **நான்கு** காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து வேறுபட்ட கருத்துரைத்த **நான்கு** மேற்கத்தேய நிபுணர்களைப் பெயரிட்டு, அவர்களில் இருவர் அபிவிருத்தித் தொடர்பில் முன்வைத்த **இரண்டு** விடயங்கள் வீதம் தனித்தனியே விவரிக்குக.

**4.** (i) எண்மான (டிஜிட்டல்) அச்சிடலின் **இரண்டு** முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.

(ii) பூகோளமய ஊடகத்தில் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மையைக் காட்டும் விடயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் புகைப்படவியல் பயன்படுத்தக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக.

(iv) தற்போதைய வெகுசன ஊடகச் செயன்முறையில் தணிக்கை பிரயோகப்படுத்தப்படும் **நான்கு** வழிகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

**5.** (i) "பண்பாடு என்பது பல கூறுகளின் ஒன்றிணைவாகும்." மானுடவியலாளர் மாலினோவுஸ்க்கியின் கருத்து விளக்கத்தின்படி பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள் **நான்கினைப்** பெயரிடுக.

(ii) "பண்பாட்டில் இடம்பெறும் பல்வேறு மாற்றங்கள் பண்பாட்டு அதிர்விற்குக் காரணமாகின்றன." பண்பாட்டு அதிர்வில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) "உள்ளக அமைதியும் சகவாழ்வும் உள்ளூர்ப் பண்பாட்டில் உயரிய பெறுமதியுடையனவாகின்றன." உள்ளக அமைதியும் சகவாழ்வும் இன்மையால், குடும்பமொன்றில் காணப்படக்கூடிய தொடர்பாடல் பிரச்சினைகள் **மூன்றினை** விவரிக்குக.

(iv) "பிரதான பண்பாட்டுப் பிரவாகத்திற்கும் பிரதான துறை ஊடகங்களுக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்பட முடியும்." மேற்கூறிய நிலைமைக்கு எதிராகப் பணியாற்றக்கூடிய மாற்று ஊடகங்களின் பண்புகள் **நான்கினை** விபரமாக விளக்குக.

**6.** மொழி, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட அதி சிறப்புவாய்ந்த ஒரு கருவியாகும்.

(i) மொழியைப் பயன்படுத்தி உளக் காட்சிகளை உருவாக்கக்கூடிய ஒருவரது ஆற்றலை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப்படும் பதத்தினைப் பெயரிடுக.

(ii) "வாழும் மொழிகள் தமக்கேயுரித்தான தனித்துவப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன." அவ்வாறான பண்புகள் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) வெகுசன ஊடகங்களில் மொழிப் பயன்பாட்டுக்கான வரையறைகள் காணக்கிடைக்கின்றன. செய்திப் பத்திரிகை, வானொலி ஆகிய ஊடகங்கள் ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்துகின்ற அத்தகைய வரையறைகள் தலா **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) புதிய ஊடகப் பயன்பாட்டில் காணக்கிடைக்கின்ற மொழிரீதியான போக்குகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக.

**7.** (i) 'அபிவிருத்தி' தொடர்பிலான வரைவிலக்கணத்தில் டட்லி சியர்ஸ் முன்னிலைப்படுத்திய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) அபிவிருத்தித் தொடர்பாடலில் பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவது பற்றிய பொருத்தப்பாட்டினை **இரண்டு** விடயங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(iii) சினிமா ஊடகம் எவ்வகையில் தொலைக்காட்சி ஊடகத்திலிருந்து வேறுபடுகின்றது என்பதை **மூன்று** விடயங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(iv) ஊடக விமர்சனம் என்பது படைப்பாளி, பெறுநர் ஆகிய இரு சாராருக்கும் நன்மை பயக்கக்கூடியது. ஊடக விமர்சனம் தொடர்பில் படைப்பாளிக்கு முக்கியத்துவமானதாய் அமையும் **இரண்டு** விடயங்களையும் பெறுநருக்கு முக்கியத்துவமானதாய் அமையும் **இரண்டு** விடயங்களையும் வெவ்வேறாக விளக்குக.

* * *

More Past Papers at
tamilguru.lk